**சிங்கப்பூரும் டாங் கப்பல் சிதைவும்**

காலஞ்சென்ற திரு கூ டெக் புவாட் அவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் கூ டெக் புவாட் சொத்து வழங்கிய தாராளமான நன்கொடை மூலம் டாங் கப்பல் சிதைவு வாங்கப்பட்டது.

இந்த வட்டாரத்தில் வணிகம் குறித்த ஆரம்பகால வரலாற்றை வெளிப்படுத்தும் முக்கியத்துவத்துக்காக டாங் கப்பல் சிதைவுகளை 2005ஆம் ஆண்டில் வாங்கியது சிங்கப்பூர் அரசாங்கம். சரக்கின் மீட்பு, பாதுகாப்பு ஆகியவற்றை டில்மன் வால்ட்டர் ஃபாங் மேற்கொண்டார். பலவிதமான பார்வையாளர்களுடன் பகிர்ந்துக்கொள்ளவும், சிங்கப்பூர் தனது வளமிக்க கடல் சம்மந்தபட்ட வரலாற்றில் பெருமை கொள்ள வேண்டும் என்ற நோக்கில் கூ டெக் புவாட் சொத்து தாராளமான வழங்கிய உதிவியினால் டாங் கப்பல் சிதைவு வாங்கப்பட்டது.

**9ஆம் நூற்றாண்டின் கப்பல் சிதைவிலிருந்து ஆடம்பரப் பொருள்கள்**
**சிங்கப்பூர் வணிகத்தின் பண்டைய வேர்கள்**

1998ல் ஜாவா கடலோரத்தில் பெலித்துங் தீவுக்கு அருகே ஒரு கப்பல் சிதைவு கண்டுபிடிக்கப்பட்டது. சீனாவில் டாங் சாம்ராஜ்யத்தில் (618-907) தயாரிக்கப்பட்ட 60,000க்கும் அதிகமான வனைபொருள்கள், தங்கம், வெள்ளியில் செய்யப்பட்ட ஆடம்பரப் பொருள்கள் போன்றவை அந்தச் சிதைவுகளில் கண்டெடுக்கப்பட்டன. ஈரான், ஈராக்கை நோக்கிப் பயணித்த அந்தக் கப்பல், சீனா, தென்கிழக்காசியா, மத்தியக் கிழக்கு ஆகியவற்றுக்கிடையே வலுவான வணிகத் தொடர்புகள் இருந்தன என்பதற்கு ஆரம்பகாலச் சான்று.

சிங்கப்பூருக்கு சுமார் 600 கிலோமீட்டர் தென்கிழக்கே கண்டுபிடிக்கப்பட்ட டாங் கப்பல்சிதைகவுகள், இந்த வட்டாரம் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக உலகாளாவிய வர்த்தகத்திற்கு ஒரு மையமாக விளங்கியது என்பதைக் காட்டுகிறது. இரண்டு கடல்களுக்கு இடையில், மத்தியக் கிழக்கிலிருந்து இந்தியா, தென்கிழக்காசியா, சீனா வரை சுறுசுறுப்பான கடல்வழியில் சிங்கப்பூர் அமைந்திருக்கிறது. மத்திய ஆசியாவில் அதிகம் புகழ் பெற்றிருந்த பட்டுப் பாதைக்குச் சவாலாக இந்தக் கடல்வழி கட்டமைப்பு அமைந்திருந்தது. மத்தியக் கிழக்கிலிருந்து கண்ணாடி, இந்தியாவிலிருந்து பருத்தி, தென்கிழக்காசியாவிலிருந்து மரம், தாளிப்புப் பொருள்கள், சீனாவிலிருந்து வனைபொருள்கள், பட்டு ஆகியவை கொண்டுவரப்பட்டன. இந்தப் பொருளியல் பிணைப்பு கலை சார்ந்த எண்ணப் பரிமாற்றங்களுக்கும் பல கலாசாரங்களைச் சேர்ந்தவர்களிடையே தொடர்புக்கும் வழிவிட்டது.

9ஆம் நூற்றாண்டில் உலகளாவிய வணிகக் கட்டமைப்பின் மையப்பகுதியில் சிங்கப்பூரின் வட்டாரம் இருந்ததை டாங் கப்பல்சிதைவுகள் காட்டுகின்றன. உலகளாவிய கப்பல் போக்குவரத்து சந்திக்கும் இடமாக சிங்கப்பூர் வெற்றி பெற்றதற்கு பண்டைய வேர்கள் உள்ளன. இந்த அபூர்வமான, அழகிய பொருள்கள் கலைஞர்கள் மற்றும் வணிகர்களின் புத்திக் கூர்மையைக் காட்டுவதோடு, வேற்று நாடுகளிலிருந்து வரும் பொருள்களை வெகு காலமாகவே உலகப் பயனீட்டாளர்கள் போற்றினர் என்பதையும் காட்டுகின்றன.

**கப்பல் சிதைவின் காலத்தைக் கணிப்பது**

கப்பல் சிதைவின் காலம் மூன்று ஆதாரங்களின் அடிப்படையில் அமைந்தது. கப்பலில் காணப்பட்ட இரண்டு சீன நாணயங்கள் 845ஆம் ஆண்டுக்கு முன்பு செய்யப்பட்டவை. கப்பலில் இருந்த பலகை, இலவங்கப்பூ, மரப்பிசின் ஆகியவற்றின்மீது செய்யப்பட்ட கதிரியக்கக் கார்பன் சோதனைகள் அவை 670ஆம் ஆண்டுக்கும் 890ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்டவை என்பதை உணர்த்தின. மிகமுக்கியமாக, சாங்ஷாவில் செய்யப்பட்ட ஒரு வனைபொருள் கிண்ணத்தில் 826ஆம் ஆண்டின் ஒரு குறிப்பிட்ட நாள் குறிக்கப்பட்டுள்ளது. எனவே அந்தக் கப்பல் பயணம் இடம்பெற்றிருக்கக்கூடிய ஆக முந்தைய ஆண்டு அதுவாகவே இருக்கும்.

மற்ற வகை வனைபொருள்களின் வயது சற்றுக் குறைவாக இருக்கலாம். மற்ற அகழ்வாராய்ச்சிகளில் கண்டுபிடிக்கப்பட்டவையுடன் ஒப்பிடும்போது அது தெரிய வருகிறது. அந்தக் கப்பல் 830கள் அல்லது 840களில் பயணித்திருக்கலாம்.

**பாதுகாத்தல்**

சிதைவுகள் மீட்கப்பட்டவுடன் பாதுகாப்பாளர்களால் பொருள்கள் ஆராயப்பட்டு சுத்தம் செய்யப்பட்டன. அவற்றின் மீது படிந்திருந்த படிமங்கள் அகற்றப்பட்டதோடு இரண்டாண்டுகளுக்கு அவை உப்புநீக்கம் செய்யப்பட்டன. உடைந்த வனைபொருள்கள் பசையால் ஒட்டப்பட்டன. அல்லது காமாணற்போன பகுதிகள் பொருத்தப்பட்டன. உலோகப் பொருள்களின் ஆரம்பத் தோற்றத்தை வெளிப்படுத்துவதற்கு ஏதுவாக அவற்றுக்கு ரசாயன சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

**மீனவர்களின் அபூர்வமான கண்டுபிடிப்பு**

1998ல் ஜாவா கடலில் பெலித்துங் தீவுக்கு அருகில் கடல் வெள்ளரிக்காய்களுக்காக முக்குளித்த மீனவர்கள் கடல் படுகைக்கு மேல் ஒரு மண்மேடு இருந்ததைக் கண்டனர். ஒரு பவளத்திற்குள் நிறைய வனைபொருள் கிண்ணங்கள் கிடந்தன. அந்தக் கண்டுபிடிப்பு இந்தோனேசிய அரசாங்க அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது.

நிலத்திலிருந்து மூன்று கிலோமீட்டருக்கும் குறைவான தொலையில் ஆழமற்ற கடலில் சிதைவுகள் இருந்ததால் சூறையாடல், மீன் பிடிக்கும்போது எதிர்பாராத அழிவு போன்றவை ஏற்படும் அபாயம் இருந்தது. எனவே இந்தோனேசிய அரசாங்கம் சரக்குகளை மீட்க ஒரு மீட்பு நிறுவனத்தை நியமித்தது. இரண்டு பருவங்களில் சுமார் 60,000 பொருள்கள் மீட்கப்பட்டன. பெரும்பாலான வனைபொருள்கள் அப்படியே நல்ல நிலையில் பாதுகாக்கப்பட்டிருந்தன.

**தொல்பொருள் ஆராய்ச்சி**

கப்பல் சிதைவுகளை மீட்க வர்த்தக மீட்பு நடவடிக்கை சரியானதுதானா என்ற கேள்வி தொடர்கிறது. கடலடி தொல்பொருள் ஆராய்ச்சிக்கு அதிக செலவாவதோடு அதிக காலமும் பிடிக்கும். ஆனால் அவ்வாறு செய்வதால் குறிப்புகளை ஆவணப்படுத்த முடியும். சூறையாடுவோரிடமிருந்து அந்தப் பகுதியைப் பாதுகாக்க வேண்டியிருந்ததால் விரைவான

மீட்பு முறை பயன்படுத்தப்பட்டது. சரக்கு பெரும்பாலும் சிதைவில்லாமல் பாதுகாக்கப்பட்டிருந்தது. விலை மதிப்புள்ள தகவல்கள் பதிவு செய்யப்பட்டன.

**மத்தியக் கிழக்கிலிருந்து ஒரு கப்பல்**

மரம், துணி போன்றவை அழியக்கூடியவை என்பதால் அவற்றில் வெகு சிலவே சிதைவுகளில் அழியாமல் இருந்தன. அதிகம் விரும்பப்பட்ட சீனப்பட்டு அந்தக் கப்பலின் சரக்கில் இருந்திருக்கும் என்றாலும் அதற்கான சுவடுகள் எதுவுமில்லை. மரத்தாலான கப்பலின் அடிப்புறம், உடற்பகுதி ஆகியவற்றின் பெரும்பகுதிகளை தொல்பொருள் ஆய்வாளர்கள் பதிவு செய்தனர். அதன்மூலம் அந்தக் கப்பல் எப்படிக் கட்டப்பட்டிருக்கும் என்பதை நிர்ணயிப்பது சாத்தியமாயிற்று. மரப்பலகைகள் அடுக்கப்பட்டு ஒன்றாகக் கட்டப்பட்டன. இதுபோன்ற கட்டுமான முறை வளைகுடா வட்டாரத்தில் பயன்படுத்தப்பட்டது. வளைகுடா வட்டாரம் அப்போது அபாசிட் முஸ்லிம் பேரரசின் (750–1258) ஒரு பகுதியாக இருந்தது.

**ஒட்டகங்களும் கப்பல்களும்**

**9ஆம் நூற்றாண்டு ஆசியாவில் வணிவ வழிகள்**

பிரபலம் வாய்ந்த பட்டுப் பாதை சீனாவை மத்திய ஆசியாவுடனும் மத்திய கிழக்குடனும் இணைத்தது. டாங் கப்பல் சிதைவுகளின் கண்டுபிடிப்பு, 9ஆம் நூற்றாண்டில் கடல்வழிப் பாதைகளும் முக்கியப் பங்கு வகித்தன என்பதை உறுதி செய்கின்றது. மத்தியக் கிழக்கு கப்பலான அது அனேகமாக கண்ணாடி, தாளிப்புப் பொருள்கள், கனிமங்கள் போன்றவற்றை சீனாவுக்கு ஏற்றிச் சென்று, அங்கிருந்து பட்டு, வனைபொருள்கள் போன்றவற்றைச் சுமந்துகொண்டு திரும்பியிருக்கலாம். அந்தக் கட்டமைப்புக்கு இந்தியாவும் தென்கிழக்காசியாவும் பொருள்களையும் சிப்பந்திகளையும் வழங்கின. நிலம்வழி ஒட்டகங்களிலோ குதிரைகளிலோ செல்வதைக் காட்டிலும் கப்பல்களில் மிகப்பெரிய அளவு சரக்குகளை ஏற்றிச்செல்ல முடியும்.

சீனாவின் டாங் பேரரசு, மத்திய கிழக்கில் பாக்தாதைத் (நவீன ஈராக்கில்) தலைநகராகக் கொண்ட அபாசிட் இஸ்லாமியப் பேரரசு ஆகிய இரண்டு பேரரசுகள் 9ஆம் நூற்றாண்டில் ஆசியாவில் ஆதிக்கம் செலுத்தின. சுமத்ரா, ஜாவா, மலாய் தீபகற்பம் ஆகியவற்றில் நிறுவப்பட்ட ஸ்ரீவிஜயப் பேரரசு, கிழக்குக்கும் மேற்குக்கும் இடைப்பட்ட முக்கியமான சந்திப்பில் இருந்தது.

இப்போதைய சிங்கப்பூர் போலவே தென்கிழக்காசியாவில் இருந்த துறைமுகங்கள் பொருள் வணிகத்திலும், கப்பல் விநியோகம், பழுதுபார்ப்பு ஆகியவற்றிலும் ஈடுபட்டதோடு சிப்பந்திகளையும் வழங்கின. மலாய் உலகத்தைச் சேர்ந்த மாலுமிகள் அதிகத் திறன் வாய்ந்தவர்கள். கப்பல் சிதைவுகளில் கண்டுபிடிக்கப்பட்ட சில பொருள்கள், அந்தக் கப்பலின் மாலுமிகளில் சிலர் தென்கிழக்காசியாவிலிருந்து வந்திருக்கலாம் என்பதை உணர்த்துகின்றன.

**அந்தக் கப்பல் ஏன் ஜாவா கடலில் இருந்தது?**
சிங்கப்பூரையும் மலாக்கா நீரிணையையும் கடந்து செல்வதே சீனாவுக்கும் மத்திய கிழக்கிற்கும் இடையில் உள்ள நேரடியான கடல்வழியாகும். ஆனால் கப்பல் சிதைந்ததோ ஜாவா கடலில். அது தெற்கிலும் மேற்கிலும் அதிக தூரம் திசை மாறிச் சென்றிருக்கிறது. அதற்கு அங்கு என்ன வேலை?

ஜாதிக்காய், கிராம்பு போன்ற தாளிப்புப் பொருள்களைப் பெற அது ஜாவா நோக்கிச் சென்றிருக்கலாம். சரக்கில் கண்டுபிடிக்கப்பட்ட சாங்ஷா கிண்ணங்கள் ஜாவாவிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால் இந்த வட்டாரத்தில் 9ஆம் நூற்றாண்டில் சீன வனைபொருள்கள் பரிவர்த்தனை செய்யப்பட்டன என்பது தெரியவருகிறது.

இந்தக் கப்பலின் கடைசி நிறுத்தம் அபாசிட் பேரரசாக இருக்கலாம். ஏனெனில் இதில் கண்டுபிடிக்கப்பட்ட பொருள்கள் அந்த வட்டாரத்துக்குடைய வடிவங்களில் காணப்படுகின்றன.

**அனைத்துலக சிப்பந்திகள்**
9ஆம் நூற்றாண்டில் ஆசியா முழுவதுமிருந்த துறைமுகங்கள் பலஇன மக்கள் சங்கமிக்கும் இடமாக இருந்தன. தெற்கு சீனாவின் கரையோர நகரங்களில் கணிசமான அளவு மத்தியக் கிழக்கு சமூகத்தினரும் இந்தியச் சமூகத்தினரும் வாழ்ந்தனர். அவர்களுள் முஸ்லிம்கள், யூதர்கள், பார்சிகள், கிறிஸ்துவர்கள் அடங்குவர். கப்பல் சிதைவுகளிலிருந்து மீட்கப்பட்ட பொருள்கள் அந்தக் கப்பலின் சிப்பந்திகள் பல இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைக் காட்டுகின்றன.

மத்தியக் கிழக்கைச் சேர்ந்த வணிகர்கள் அனேகமாக அந்தக் கப்பலை ஒப்பந்தம் செய்திருப்பார்கள். ஆனால் சிப்பந்திகளில் சில சீனர்களும் அடங்கியிருந்தனர். கப்பலின் பெரும்பகுதி சரக்குகள் வைக்கப் பயன்பட்டிருக்கும் என்பதால் சிப்பந்திகள் மேல் தளத்தில் தங்கியிருந்திருப்பர். ஆபத்து நிறைந்த பயணம், வெளிப்புறச் சூழல் இவற்றால் சில சிப்பந்திகள் வழியிலேயே இறந்திருக்கக் கூடும். அதனால் வழியில் இருந்த துறைமுகங்களில் புதிய சிப்பந்திகள் பணியமர்த்தப் பட்டிருக்கக்கூடும்.

**கடலில் சூதாட்டம்**
பருவமழைக் காலம் போகவும் காற்றுத் திசை மாறுவதற்காகவும் காத்திருக்கும் நீண்ட காலங்களில் சிப்பந்திகள் விளையாட்டுகளிலும் சூதாட்டத்திலும் ஈடுபட்டிருக்கலாம். எலும்பால் செய்யப்பட்ட தாயம் (கப்பல் சிதைவு ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்ட ஆகப் பழமையான தாயம்) அதற்குப் பயன்பட்டிருக்கலாம். கருவாலிக் கொட்டை வடிவிலான நான்கு காய்கள் பச்சிசி (இந்தியாவில் தோன்றிய அட்டை விளையாட்டு) விளையாட்டில் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

**கப்பலில் வாழ்க்கை**
சிதைவுகளில் கண்டெடுக்கப்பட்ட சில பொருள்கள் கப்பலில் வாழ்க்கை எப்படி இருந்திருக்கும் என்பதற்கான சுவாரசியமான பார்வையைத் தருகின்றன. வலைகளின் எடையை வைத்துப் பார்க்கும்போது சிப்பந்திகள் உணவுக்கு மீன்பிடித்திருப்பார்கள் என்பது தெரிகிறது. உரல், குழவி, உருட்டுக்கட்டை ஆகியவை உணவைத் தயாரிக்கவும், பெரிய தொட்டி குடி நீரைச் சேமித்து வைக்கவும் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். ஊசியும் கழியும் பாய்மரங்களையும் வலைகளையும் தைக்கப் பயன்பட்டிருக்கலாம். இடுக்கிமுள் அறுவை சிசிச்சைக்குப் பயன்பட்டிருக்கக்கூடும்.

**கப்பலில் சீனர்கள்**
சிதைவில் காணப்பட்ட ஒரு சீன மை வைக்கும் கல் அனேகமாகக் கல்வியறிவு பெற்ற ஒரு சீன வர்த்தகருக்குச் சொந்தமானதாக இருக்கும். தேநீர் தயாரிக்கப் பயன்படும் வனைபொருள் அரைப்பான் கப்பலில் பயணித்த ஒரு சீனருக்குச் சொந்தமானதாக இருக்கலாம்.

**கப்பலில் மத்தியக் கிழக்கினர்**
கப்பல் மத்தியக் கிழக்கில் கட்டப்பட்டிருந்தாலும் அந்த வட்டாரத்தைச் சேர்ந்த மிகச்சில பொருள்களே சிதைவில் கண்டுபிடிக்கப்பட்டன: இரண்டு நீலப்பச்சை மெருகு பூசப்பட்ட கொள்கலன்கள் ஒரு ஜாடி மற்றும் ஒரு கண்ணாடி போத்தல்.

நீலப்பச்சை மெருகு பூசப்பட்ட கொள்கலன் பெருமளவில் ஏற்றுமதி செய்யப்பட்டது. பேரீச்சம்பழச் சாற்றை ஊற்றி வைக்க அது பயன்படுத்தப்பட்டிருக்கலாம். அவை ஆசியா முழுவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. உதாரணத்திற்கு, மலேசியாவின் புஜாங் பள்ளத்தாக்கு, தாய்லாந்தின் ஸ்ரீ மஹோசோட், சீனாவின் பௌத்த ஆலயங்கள் மற்றும் கல்லறைகள் போன்ற இடங்கள்.

**தென்கிழக்காசிய சிப்பந்திகள்**
முக்கியமான வர்த்தகப் பாதைகள் தென்கிழக்காசியா வழியாகவே அமைந்திருந்தன. மத்தியக் கிழக்கிற்கும் சீனாவுக்கும் இடையில் பயணித்த கப்பல்கள் பருவ மழைக் காலத்தைத் தவிர்க்கவும் முடிந்து போன வேண்டிய பொருள்களை திரும்பி நிறைவு செய்யவும் தென்கிழக்காசிய வட்டாரத்தில் தங்கியிருக்கக்கூடும். உள்ளூர் வழிகாட்டிகளும் மாலுமிகளும் கப்பல்களுக்கு உதவ நியமிக்கப்பட்டனர். தற்போதைய வியட்நாம், இந்தோனேசியா, சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து ஆகியவற்றில் பெரிய துறைமுகங்கள் இருந்ததற்கு தொல்பொருள் சான்றுகள் உள்ளன. அவற்றுள் ஆக முக்கியமானது சுமத்ராவில் ஸ்ரீவிஜயா பேரரசின் தலைநகரான பலெம்பாங்கில் இருந்த துறைமுகமாக இருக்கலாம். இந்த வட்டாரத்தின் வணிகம் முழுவதும் அதன் வழியாகத்தான் நடைபெற்றது.

**18 மீட்டர் நீளமுள்ள கப்பலில் 70,000 கிண்ணங்களை அடுக்கி வைத்தது**
பெரிய ஜாடிகளில் ஆயிரக்கணக்கான வனைபொருள் கிண்ணங்கள் நெருக்கி நெருக்கி வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு ஜாடியிலும் சுமார் 130 கிண்ணங்கள், வைக்கோலுக்கு இடையில் அடுக்கப்பட்டிருந்தன. இப்படி அடுக்கும்முறையும் கடற்படுகையின் மண்ணும் பெரும்பாலான வனைபொருள்களைச் சிதைவிலிருந்து காத்தன. கப்பலில் இருந்த 70,000 கிண்ணங்களின் எடை சுமார் 25 டன்.

கப்பலின் சரக்கும் எடைபாரமும் இணைந்து அதனை நீரில் நிலையாக இருக்க உதவின. கப்பல் தண்ணீரில் அதிக உயரத்தில் இருந்தால் அது கவிழும் அபாயம் உண்டு. அதுவே தண்ணீருக்கடியில் அதிகமாக இருந்தால் அலைகளால் சூழப்படும் அபாயம் உண்டு. ஒவ்வொரு துறைமுகத்திலும் சரக்குகள் இறக்கப்பட்டபிறகு அதற்கேற்றவாறு கப்பலின் எடைபாரமும் சரி செய்யப்பட்டது. சிதைவில் கண்டெடுக்கப்பட்ட ஈயப் பாளங்கள் கப்பலின் எடைபாரமாகப் பயன்படுத்தப்பட்டன.

**சாங்ஷா சூளைகள்**
இந்தக் கப்பலின் பெரும்பாலான சரக்குகள் ஹூனான் மாகாணத்தில் உள்ள சாங்ஷா சூளைகளில் செய்யப்பட்டவை. மீட்கப்பட்ட சுமார் 57,500 பொருள்கள் 9ஆம் நூற்றாண்டின் பெரும் உற்பத்திக்கும் வர்த்தகத்திற்கும் சான்று.

சீனாவிலும் வெளிநாடுகளிலும் சாங்ஷா வனைபொருள்கள் பிரபலமாக இருந்தன. யாங்ஷோ துறைமுகத்தில் பெரிய அளவிலான வனைபொருள்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அங்குதான் பொருள்கள் சேமித்து வைக்கப்பட்டு கப்பல்களில் ஏற்றப்படும். ஜாவா, மலாய் தீபகற்பம், வியட்நாம், கம்போடியா, தாய்லாந்து ஆகியவற்றிலும் சாங்ஷா வனைபொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்தச் சரக்கின் ஒரு பகுதி தென்கிழக்காசியாவில் விற்கப்படுவதற்காக இருக்கலாம்.

சாங்கானின் (தற்போதைய சியான்) டாங் தலைநகரத்திலிருந்தும் கரையோர வர்த்தக மையங்களிலிருந்தும் தனித்து இருந்தது சாங்ஷா. இதனால் சாங்ஷா வனைஞர்கள் பச்சை, பழுப்பு மெருகைக் கொண்டு தங்களுக்கே உரித்த ஒரு பாணியை உருவாக்கினர். தூரிகையைக்கொண்டு அவர்கள் தீட்டிய வடிவங்கள் தன்னிச்சையான இயல்பையும் சக்தியையும் வெளிப்படுத்தின. கிண்ணங்கள், ஜாடிகள், கூஜாக்கள் போன்ற அன்றாடம் பயன்படும் பொருள்களைச் செய்வதில் தனிக்கவனம் செலுத்தியது சாங்ஷா. இங்கு வைக்கப்பட்டிருக்கும் கல் பாண்டங்கள் சாங்ஷா சூளைகளைளில் சுமார் 830களில் செய்யப்பட்டன.

**பச்சை மெருகுடன் கூடிய சாங்ஷா வனைபொருள்கள்**
சாங்ஷா சூளைகளில் வழக்கத்துக்கும் குறைவாக செய்யப்பட்டவை பச்சை மெருகு பூசப்பட்ட பாத்திரங்கள். அவற்றுக்கான வெகு சில உதாரணங்களே சிதைவுகளில் காணப்பட்டன. இவற்றில் பெரும்பாலானவை யூ சூளைகளில் செய்யப்பட்ட பிரசித்தி பெற்ற வனைபொருள்களின் வடிவங்களையும் வண்ணங்களையும் பின்பற்றியிருக்கின்றன.

**பல்வேறு வடிவங்களும் வடிவமைப்புகளும்**
சாங்ஷா சூளைகள் பல்வேறு வடிவங்களிலும் வடிவமைப்புகளிலும் பாத்திரங்களைத் தயாரித்தன. அது அவர்களின் படைப்புத்திறனைப் பிரதிபலிக்கிறது.

**விளையாட்டுத்தனமான வடிவங்கள்**
சாங்ஷாவில் செய்யப்பட்ட பெரும்பாலான வனைபொருள்கள் அன்றாடத் தேவைக்கானவை என்றாலும் சில பொருள்கள் விசித்திரமானவை. வனைபொருளால் செய்யப்பட்ட நாய், தாள் எடையாகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். தண்ணீர் ஊற்றும் கருவியின் கைப்பிடி கடல்நாகம் போல் உள்ளது. ஆயிரம் ஆண்டு பழமை வாய்ந்த வடிவத்துடன் சாம்பிராணித் தட்டும் உண்டு.

**தண்ணீர்ப் பாத்திரங்கள்**
நீண்ட வாயுடைய தண்ணீர்ப் பாத்திரங்கள் சாங்ஷா சூளைகளில் வழக்கமாக செய்யப்பட்டன. ஜாடிகளில் களிமண்ணைப் பூசுவதன் மூலம் புத்தாக்கமான அலங்காரங்களை கலைஞர்கள் உருவாக்கினர். இலை தழை, தோட்டங்கள், வீரர்கள், நடனமணிகள் போன்ற வடிவங்களில் அவை அமைந்திருந்தன.

ஜாவாவில் இந்த வகை தண்ணீர்ப் பாத்திரங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அந்த வட்டாரத்தில் வணிகம் புரிவதற்கு அந்தக் கப்பல் நோக்கம் கொண்டிருந்தது என்பதை இது உணர்த்துகிறது.

**சாங்ஷா கிண்ணங்களின் தனிப்பட்ட வடிவமைப்புகள்**
ஆயிரக்கணக்கான கிண்ணங்களில் ஒரு சில மட்டும்தான் வழக்கமான வடிவமைப்புகளைக் கொண்டிருக்கவில்லை. அவை தனிமனிதர்கள் மனம்போன போக்கில் செய்ததாக இருக்கலாம் அல்லது அதிக அளவில் தயாரிக்கப்படாத புதிய வடிவமைப்புகளாக இருக்கலாம்.

**சாங்ஷா கிண்ணங்களின் பெரும் உற்பத்தி**
சாங்ஷா சூளைகள் தொழிற்சாலை அளவில் வனைபொருள்களை உற்பத்தி செய்தன. மேகங்கள், நிலவனப்புகள், பறவைகள், மலர்கள், இலை தழைகள், சுருள்வட்டம் போன்ற வடிவங்கள் பரவலாகப் பயன்படுத்தப்பட்டன. பல கலைஞர்களால் தீட்டப்பட்டதால் வடிவங்கள் வெகுவாக மாறுபட்டிருக்கும். கிண்ணங்களின் விளிம்புகளில் உள்ள பழுப்பு நிறம் அவற்றை மெருகில் நனைப்பதால் உருவானவை.

இங்கு வைக்கப்பட்டிருக்கும் கல் பாண்டங்களும் வலது பக்கத்தில் உள்ளவையும் சாங்ஷா சூளைகளைளில் சுமார் 830களில் செய்யப்பட்டன.

**தகவல் பொறிக்கப்பட்ட கிண்ணங்கள்**
சாங்ஷா வனைபொருள்களை அழகுபடுத்த சீனக் கையெழுத்துக் கலை பயன்படுத்தப்பட்டது. சுமார் 400 கிண்ணங்களில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான கிண்ணங்களின் அடிப்பகுதியில் கருப்பு மை தீட்டப்பட்டுள்ளது. அது எண்ணுவதற்காக இருக்கலாம் அல்லது முத்திரையாக இருக்கலாம்.

மற்ற எழுத்துகள் தெரிய வேண்டும் என்பதற்காக மெருகின் கீழ் பொறிக்கப்பட்டுள்ளன. ஒரு கிண்ணத்தில் கவிதை பொறிக்கப்பட்டுள்ளது. மற்றவற்றில் ஒரே எழுத்து வெவ்வேறு திசைகளில் பொறிக்கப்பட்டுள்ளது. சில எழுத்துகள் வேலைப்பாடுகளின் மேல் அல்லது கீழ் பொறிக்கப்பட்டுள்ளன.

**தங்கம், வெள்ளியிலான ஆடம்பரப் பொருள்கள்**
சிதைவுகளில் இருந்த பெரும்பாலான கிண்ணங்கள் விலை அதிகமில்லாதவை. ஆனால் தங்கம், வெள்ளியிலான சில பொருள்களும் அதில் இருந்தன. அவற்றில் பெரும்பாலானவை தெற்கு சீனாவில் செய்யப்பட்டவை. 9ஆம் நூற்றாண்டில் மத்திய அரசாங்கம் நலியத் தொடங்கியதும் கலைஞர்கள் தலைநகர் சாங்ஙானை விட்டு செல்வாக்கு மிகுந்த துறைமுகங்களில் குடியேறினர்.

தங்கத்தில் நுண்ணியமாகச் செதுக்கப்பட்ட பொருள்கள் அரசவையில் அதிகம் விரும்பபப்பட்டன. அதுபோன்ற பொருள்களை மாகாணத் தலைவர்கள் கப்பமாக அரசவைக்கு அடிக்கடி வழங்கினர். சிதைவுகளில் காணப்பட்ட தங்க, வெள்ளிப் பொருள்களின் தரத்திற்கு ஒத்த அரசவை அன்பளிப்புகள் சியானுக்கு வெளியே உள்ள ஃபாமன் கோவிலின் நிலவறையில் உள்ளன.

தங்கத்திலான எண்கோண வைன் கோப்பை கப்பல் சிதைவுகளில் கண்டுபிடிக்கப்பட்டது. டாங் பேரரசு காலத்தைச் சேர்ந்த ஆகப் பெரிய வைன் கோப்பை அது. ஜாவாவுக்கும் மத்திய கிழக்குக்கும் செல்லவிருந்த ஒரு சரக்குக் கப்பல் அத்தகைய விலைமதிப்பு மிக்க தங்கப் பொருள்களைக் கொண்டு செல்வதற்கு என்ன காரணமாக இருக்கும்? வெளிநாட்டு ஆட்சியாளர்களுக்கான அன்பளிப்பாக இருக்குமா? அல்லது கடன்பட்ட டாங் அரசாங்கம் தங்கத்தையும் வெள்ளியையும் வெளிநாட்டு வணிகர்களிடம் விற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்குமா?

*சு, ஓ சு!*
*வில்லோ செடியின் கிளை பற்றிய பாட்டை எனக்காகப் பாடு,*
*தங்கக் கோப்பையில் நான் உனக்காக வைன் ஊற்றுவேன்,*
*குடிகார நிலத்துக்கு என்னுடன் உன்னை அழைத்துச் செல்வேன்.*

– பாய் ஜூயி, “கடந்தகால உணர்வுகள் பற்றிய பாட்டு” (சுமார் 840)

**வெள்ளிப் பெட்டிகள்**
இந்தப் பெட்டிகள் எல்லாப் பக்கங்களிலும் அலங்கரிக்கப்பட்டுள்ளன. மேலே ஒரு வடிவமைப்பும் கீழே வித்தியாசமான சின்னமும் பொறிக்கப்பட்டுள்ளன. ஊதுபத்தி, அழகுப் பொருள்கள் அல்லது மருந்தை வைக்க அவை பயன்பட்டிருக்கலாம்.

வாத்து ஜோடி திருமண மகிழ்ச்சியைக் குறிக்கிறது. இந்த வடிவமைப்புடன் கூடிய பெட்டிகள் திருமணப் பரிசுகளாகச் செய்யப்பட்டிருக்கலாம். இலை வடிவமான பெட்டிகள் அரியவையாகக் கருதப்படுகின்றன.

**பச்சை மாணிக்கக் கல் போன்ற பச்சை**
**டாங் பேரரசின் இளம்பச்சை மெருகு**
செலடோன்ஸ் எனப்படும் சீனப் பச்சை வனைபொருள்களை வெளிநாட்டு வாடிக்கையாளர்கள் பெரிதும் மதித்தனர். அவை தென்கிழக்காசியாவிலும், மத்தியக் கிழக்கிலும் பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பின்னாளில் தென்கிழக்காசிய சூளைகள் சொந்தமாக இளம்பச்சை மெருகு பூசப்பட்ட பொருள்களைத் தயாரித்தன.

பச்சை மெருகு பூசப்பட்ட கல் பாண்டங்கள் தெற்கு சீனாவின் சிறப்பு. மிகச்சிறந்த வேலைப்பாடுகள் (செஜியாங் மாகாணத்தின் யூ சூளைகளிலிருந்து வந்தவை) பச்சை மாணிக்கக் கல்லுடன் ஒப்பிடப்பட்டன. அதற்கு அவற்றின் வண்ணம் மட்டும் காரணமல்ல. அவற்றை அடிக்கும்போது வரும் ஒருவகை ரீங்காரமும் காரணம்.

யூ சூளைகள் அதிகத் தரம் வாய்ந்த சீனப் பச்சை வனைபொருள்களைக் குறைந்த அளவிலேயே தயாரித்தன. மற்ற சூளைகள் இதே போன்ற பச்சைப் பாண்டங்களைச் செய்து பார்த்தன. ஆனால் அவை கடினமாக இருந்தன. கப்பல் சிதைவில் கண்டெடுக்கப்பட்ட சுமார் 900 பச்சை வனைபொருள்களில் சுமார் 200 மட்டுமே யூ சூளைகளிலிருந்து வந்தவை.

**இதழ்கள் கொண்ட முட்டை வடிவக் கிண்ணங்கள்**
கப்பல் சிதைவில் ஒரு சில பெரிய கிண்ணங்களே கண்டுபிடிக்கப்பட்டன. குழுவாக அமர்ந்து உண்ணும் பழக்கமுடைய மத்தியக் கிழக்கு நாடுகளுக்காக அது செய்யப்பட்டிருக்கலாம்.

**மெய்சியான், தியோச்சியூ (சௌஷோ) ஆகியவற்றின் பச்சைப் பாண்டங்கள்**
யூ சூளைகளில் செய்யப்பட்ட பாண்டங்களின் பிரபலம் அதிகரித்ததால், அதிக லாபம் தரும் சீனப்பச்சை வனைபொருள் சந்தையில் நுழைய மற்ற சூளைகள் முயன்றன. குறிப்பாக, வடக்கு குவாங்டோங் மாகாண சூளைகளும், மெய்சியான், தியோச்சியூ சூளைகளும் நல்ல தரமான சீனப்பச்சை வனைபொருள்களைத் தயாரித்தன.

**பெரிய அளவு உற்பத்தி பெரிய அளவு லாபம்**
டாங் கப்பல் சிதைவில் கண்டெடுக்கப்பட்ட சரக்கின் அளவை வைத்துப் பார்க்கும்போது பின்வருவன தெரிய வருகிறது:

- 9ஆம் நூற்றாண்டில் வெளி நாடுகளில் சீன வனைபொருள்களுக்கு இருந்த மிகப்பெரிய பிரபலம்;
- கிட்டத்தட்ட ஒரே மாதிரியான வனைபொருள்களை பெருமளவில் தயாரிக்கக்கூடிய திறன்;
- சீனா முழுவதிலுமிருந்து பொருள்களை ஒரே துறைமுகத்தில் திரட்டும் அளவுக்கு இருந்த உள்நாட்டுக் கப்பல் கட்டமைப்பு;
- சரக்கு மூலம் கிடைக்கும் லாபத்தை முதலீடு செய்து பகிர்ந்து கொள்ளும் நிதி முறை.

சீனாவின் வெவ்வேறு சூளைகள் வெவ்வேறு விதமான பொருள்களைச் செய்வதில் தனித்திறமை பெற்றிருந்தன. சந்தைத் தேவைக்கு ஏற்றவாறும் அவை தங்கள் பொருள்களை மாற்றியமைத்துக் கொண்டன. உதாரணத்திற்கு, டாங் பேரரசின் போது நிறைய சூளைகள் குறைந்த சூட்டில் கல்லறை உருவங்களைச் செய்வதை விட்டுவிட்டு அதிகத் தாக்குப்பிடிக்கக் கூடிய மேசைகளை உருவாக்கின. சிதைவில் உள்ள பல வனைபொருள்கள் உயர்வான சுவையைப் பிரதிபலிக்கின்றன. உதாரணத்திற்கு யூ சூளைகளில் செய்யப்பட்ட இளம்பச்சை மெருகுப் பொருள்களும், சிங் சூளைகளில் தயாரிக்கப்பட்ட வெள்ளைப் பொருள்களும் அவற்றின் அழகுக்காகவும் நளினத்திற்காகவும் மதிக்கப்பட்டன.

வனைபொருள்கள் ஆறுகள், கால்வாய்கள் வழி கரையோரத் துறைமுகங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டன. இந்தக் கப்பலின் சரக்கு அனேகமாக யாங்ஷோ துறைமுகத்திலோ அல்லது தெற்கில் குவாங்ஷோவிலோ ஏற்றப்பட்டிருக்கலாம்.

**வண்ணக் கலவை**
**மத்திய கிழக்குக்காக பச்சை தெளித்த வனைபொருள்கள்**
சீன சூளைகள் தயாரித்த வெள்ளை பாண்டங்களுக்குப் பச்சை மெருகு தெளிக்கப்பட்டது. தெளிப்பு முறையில் பல வண்ணங்களைப் பயன்படுத்த முடியும் என்றாலும் இஸ்லாமிய மத்தியக் கிழக்கில் பச்சை நிறமே அதிகம் விரும்பப்பட்டது. அதே போன்ற பாண்டங்கள் அபாசிட் சாம்ராஜ்யம் முழுவதும், உதாரணத்திற்கு, சமாரா, சிராஃப், நிஷாப்பூர் ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பச்சை தெளிக்கப்பட்ட சீனப் பாண்டங்கள் போலவே மத்திய கிழக்கின் குயவர்களும் உருவாக்கினர். சொந்த பாணியில் எழுத்துக்களைப் பொறித்து அவர்கள் அவற்றைச் செய்தனர்.

பச்சை தெளித்த பெரும்பாலான சீனப் பாண்டங்கள் ஹெனான் மாகாணத்தின் கோங்சியன் சூளைகளில் தயாரிக்கப்பட்டன. கோங்சியனின் வழக்கமான வெள்ளை நிறப் பாண்டங்கள் மற்ற சூளைகளின் பொருள்களோடு போட்டி போட முடியாததால் அதற்கு மாற்றாக பச்சை தெளித்த பாண்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கலாம்.

**பனி போல் வெள்ளை**

**வெள்ளை வனைபொருள்களுக்கான பேரார்வம்**

சீனாவில் செய்யப்பட்ட பாண்டங்கள் சீனாவிலும் வெளிநாடுகளிலும் பெரிதும் விரும்பப்பட்டன. அவை தென்கிழக்காசியா, மத்தியக் கிழக்கு முழுவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. டாங் கப்பல் சிதைவுகளில் கண்டுபிடிக்கப்பட்ட 300 பாண்டங்கள் அதிகத் தரம் வாய்ந்தவை. 9ஆம் நூற்றாண்டிலேயே அவற்றின் விலை அதிகமாக இருந்திருக்கும்.

மிக அதிகமாக விரும்பப்பட்ட வெள்ளைப் பாண்டங்கள் வடக்கு சீனாவின் சிங் சூளைகளில் செய்யப்பட்டன. அதிக சூட்டில் தயாரிக்கப்பட்ட அவை சுத்த வெள்ளையாக இருக்கும். அவற்றின் தோற்றத்தை வெள்ளிக்கும் பனிக்கும் ஒப்பிட்டார் சீனக் கவிஞர் லு யு. மெல்லியதாக, துல்லியமான வடிவங்களில் வனையப்பட்ட அவற்றின் மீது வெள்ளை மெருகு பூசப்படும். டாங் பேரரசு காலத்தைச் சேர்ந்த அதிகத் தரம் வாய்ந்த வெள்ளைப் பாண்டங்களாக இவை இருக்கும்.

**போலிகள்**

சீனாவிலும் வெளிநாடுகளிலும் சிங் பாண்டங்கள் போலவே செய்ய முனைப்பு ஏற்பட்டது. ஹேபெய் மாகாணத்தின் டிங் சூளைகள் சிங் பாண்டங்களைப் பிரதியெடுக்கத் தொடங்கின. விரைவில் அதிகத் தரம் வாய்ந்த வனைபொருள்களை அவை உருவாக்கின. மாறாக, கோங்சியன் சூளைகள் கடினமான களிமண்ணைப் பயன்படுத்தியதால் அவற்றிற்கு வெள்ளை நிறத்தைக் கொடுக்க வெள்ளைக் களிமண் பூசப்பட வேண்டியிருந்தது.

**மது அருந்துவது**

டாங் சீனாவில் சோற்று வைனும் சீமை இலந்தை வைனும் பிரபலமான பானங்களாக இருந்தன. போத்தல்களிலிருந்து இளஞ்சூடாக குவளைகளில் ஊற்றி அவை அருந்தப்பட்டன.

**நீல, வெள்ளை வனைபொருள்களில் உலக வர்த்தகத்தின் தொடக்கம்**

நீல, வெள்ளை வனைபொருள் உருவாக்கத்தை சீனாவும் இஸ்லாமிய மத்தியக் கிழக்கும் பகிர்ந்து கொண்டன. ஈரானும், ஈராக்கும் (9ஆம் நூற்றாண்டில் அபாசிட் சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதி) சீன வனைபொருள்களை நீண்ட காலமாகவே அதிகம் விரும்பின. மறுபக்கம், நீல மெருகு ஈரானின் தனிச் சிறப்பாக இருந்தது. அந்த வண்ணத்தைத் தந்த கோபால்ட் எனப்படும் உலோகம் ஈரானில் விளைந்ததால் சீனாவில் அது கிடைக்கவில்லை. மருந்து வில்லைகளின் ஓரங்களில் மலர்களும் இலைகளும் உள்ள வடிவமைப்பு ஈரானுக்குச் சொந்தமானது.

**கலைப் போட்டி**

9ஆம் நூற்றாண்டில் சீனாவின் வனைபொருள் சூளைகளில் துடிப்பான போட்டி நிலவியதால் வாடிக்கையாளர்களைக் கவர குயவர்கள் தங்கள் வடிவங்களைத் தொடர்ச்சியாக மாற்றிக்கொண்டே இருக்க வேண்டியிருந்தது. வெற்றிகரமான வடிவமைப்பை பல

சமயங்களில் வேறொரு சூளையும் பின்பற்றும். மேலும் சீனக் கலைஞர்கள் மத்தியக் கிழக்கு வடிவமைப்புகளிலிருந்து ஊக்கம் பெற்றனர்.

உலோகத்தில் செய்யப்பட்ட ஜாடிகளே பின்னர் வனைபொருள்களாகச் செய்யப்பட்டன. சாம்பிராணித் தட்டின் வடிவமைப்பு உலோகத் தட்டுகளைப் பின்பற்றியுள்ளது. இந்தக் காட்சிக்கூடத்தில் வைக்கப்பட்டுள்ள பெரிய பச்சை-தெளித்த நீர்க்குவளை, உலோகக் குவளையின் மாற்று வடிவம்தான்.

**மத்திய கிழக்கின் சுவை: மருந்து வில்லைகளும் மலர்களும்**
ஓரங்களில் மலர்களும் இலைகளும் உள்ள மருந்து வில்லையின் வடிவமைப்பு அபாசிட் சாம்ராஜ்யத்தில் உருவாக்கப்பட்டது. அனேகமாக மத்தியக் கிழக்கு வாடிக்கையாளர்களை ஈர்க்க சீனக் கலைஞர்கள் அந்த வடிவத்தைப் பயன்படுத்தியிருக்கலாம். கப்பல் சிதைவில் கண்டுபிடிக்கப்பட்ட வனைபொருள்கள், உலோகப் பொருள்கள் போன்ற பலவற்றில் மருந்து வில்லைகள் காணப்பட்டன. பகிர்ந்து கொள்ளப்பட்ட வடிவமைப்பு சீனாவுக்கும் மத்தியக் கிழக்குக்கும் இடையே இருந்த உறவைப் பிரதிபலிக்கிறது.

**கண்ணாடிகள்**
கப்பல் சிதைவுகளில் இருபத்தொன்பது வெண்கலக் கண்ணாடிகளும் கண்டுபிடிக்கப்பட்டன. அவை நிச்சயமாக விற்பனைக்கானவையே. சிப்பந்திகளின் சொந்தப் பயன்பாட்டுக்கல்ல.

கண்ணாடியின் ஒரு பக்கம் மிருதுவானது. மறுபக்கத்தில் அலங்காரம் இருக்கும். மிருதுவான பக்கம் பிரதிபலிக்க வேண்டும் என்பதற்காக அதில் வெள்ளி உலோகக் கலப்பு பயன்படுத்தப்பட்டுள்ளது. பல நூற்றாண்டுகள் நீருக்கடியில் இருந்ததால் அவை கருப்பு நிறமாகிவிட்டன.

**பழமையில் பண்டைய பொருள்கள்**
கப்பல் பயணத்தைத் தொடங்கியபோதே மூன்று கண்ணாடிகள் பண்டைய பொருள்களாக இருந்தன. ஹான் பேரரசைச் சேர்ந்த ஒரு கண்ணாடி, கப்பல் பயணத்திற்கு முன் ஆயிரம் ஆண்டு பழமை வாய்ந்தது. அப்படிப்பட்ட பண்டைய பொருள்களை வாங்க வெளிநாட்டினர் விரும்பியிருக்கலாம்.

**சேமிப்பு ஜாடிகள்**
**கப்பல் வழியாக கொள்கலன்களில் தொல்பொருள்களை அனுப்புதல்**
தெற்கு சீனாவின் குவாங்டோங் மாகாணத்தில் செய்யப்பட்ட பல சேமிப்பு ஜாடிகள் கப்பல் சிதைவில் காணப்பட்டன. பெரிய வாய் கொண்ட ஜாடிகளில் வனைபொருள் கிண்ணங்கள் அடுக்கப்பட்டிருந்தன. மற்றவற்றில் சீனாவின் இலவங்கப்பூ நிறைக்கப்பட்டிருந்தது. குழாய் விளிம்பு கொண்டவற்றில் திரவம் இருந்திருக்கலாம். சில ஜாடிகளில் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. அவை வணிகர்களின் முத்திரையாக இருக்கலாம். பல நூற்றாண்டுகள் நீருக்கடியில் இருந்ததால் பலவற்றில் பவளம் படர்ந்திருந்தது.

பாதுகாப்பாளர்களின் பல மணி நேர உழைப்பால் இவற்றில் சில அதனுடைய அசல் நிலைக்கு மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

**வளைகூடாவிலிருந்து ஒரு மத்தியக் கிழக்குக் கப்பல்**

ஜாவா கடலில் மூழ்கிய அந்தக் கப்பலின் கட்டுமானத்தின் போது ஓர் ஆணிகூட பயன்படுத்தப்படவில்லை. தேங்காய் மட்டையைக் கொண்டு செய்யப்பட்ட கயிற்றால் மரப்பலகைகள் ஒன்றாகக் கட்டப்பட்டன. நீர் புகாவண்ணம் இருக்க இணைப்புகளில் பருத்திப் பஞ்சு சேர்க்கப்பட்டு அவற்றின்மீது சுண்ணாம்பு பூசப்பட்டது. வளைகுடா வட்டாரத்திலும் இந்தியாவிலும் ஆரம்ப காலத்தில் பயன்படுத்தப்பட்ட உத்திகள் இவை.

மரம் ஆப்பிரிக்காவிலிருந்து வந்தது என்றும் இந்தியாவிலிருந்தும் தென்கிழக்காசியாவிலிருந்தும் வந்த பொருள்கள் மூலம் பழுதுபார்ப்புகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் அறிவியல் ஆராய்ச்சிகள் கூறுகின்றன. கப்பல் எங்கு கட்டப்பட்டது என்பதை உறுதியாகக் கூற முடியாவிட்டாலும் அது அபாசிட் சாம்ராஜ்யத்தின் முக்கியத் துறைமுகமான பாஸ்ரா (தற்போதைய ஈராக்) நோக்கிச் சென்று கொண்டிருந்தது என்பதை அதன் சரக்கு உணர்த்துகிறது.

**வளைகுடாவிலிருந்து இந்தியா, சிங்கப்பூரைச் சுற்றி தென் சீனாவுக்கு**

கப்பலின் கட்டுமான முறை அதன் வியக்கத்தக்க பயணத்தின் சுவட்டைக் கண்டறிய உதவுகிறது. வளைகுடாவில் அபாசிட் சாம்ராஜ்யத்தில் கட்டப்பட்ட அந்தக் கப்பல் இந்தியாவிலும் தென்கிழக்காசியாவிலும் நின்று பிறகு ஒரு சீனத் துறைமுகத்தில் சரக்குகளை இறக்கியது. அதன்பின் சீன சரக்குகள் ஏற்றப்பட்டு அது மத்தியக் கிழக்கை நோக்கி ஜாவாவுக்குப் புறப்பட்டது. ஜாவா கடலில் அது மூழ்கியது.

**பருவக் காற்றில்**

கோடை காலத்தில் தென்மேற்குப் பருவக்காற்றின்போது வளைகுடாவிலிருந்து கிழக்கு நோக்கிப் பயணித்திருக்கும் அந்தக் கப்பல். அக்டோபர் மாதத்திற்குப் பிறகு பருவக்காற்று திசைமாறி மேற்குப் பக்கம் வீசத் தொடங்கியதும் அது சீனாவை விட்டுப் புறப்பட்டிருக்கும்.

**தேநீர் கலை**

டாங் பேரரசின்போது சீனாவில் தேநீரின் பிரபலம் வெகுவாக அதிகரித்தது. அதற்கு அது பௌத்த தியானத்துடன் தொடர்பு படுத்தப்பட்டது ஒரு காரணமாக இருக்கலாம். தேநீர் அருந்துவதற்கு ஏதுவாக வனைபொருள்கள் செய்யப்பட்டன. யூ சூளைகளில் செய்யப்பட்ட தேநீர் கிண்ணங்களே சிறந்தவை என்று சுமார் 770ஆம் ஆண்டுவாக்கில்  த கிளாசிக் ஆ்ப் டீ என்ற நூலில் எழுதியிருக்கிறார் லு யு. அவற்றின் பிரகாசமான பச்சை நிறம் தேநீரின் நிறத்தை மேம்படுத்தியதாக நம்பப்பட்டது. மாறாக, வெள்ளைக் கிண்ணங்களில் பரிமாறப்பட்டபோது தேநீர் சிவப்பு நிறமாக இருந்தது.

டாங் காலத்தில் தேயிலை பொடியாக அரைக்கப்பட்டு, வெந்நீரில் கிண்டப்பட்டு, நறுமணப் பொருள்களும் சுவையூட்டிகளும் பின்னர் சேர்க்கப்பட்டன. குவளைகளில் அல்ல, ஆழமற்ற கிண்ணங்களில் அது அருந்தப்பட்டது.

தேநீர் தயாரிக்க வெந்நீர் ஜாடிகள், தேயிலைத் தூளையும் நறுமணப் பொருள்களையும் வைக்க மூடியுடைய பெட்டிகள், துணை உணவுகளுக்கான தட்டுகள் போன்றவை தேவைப்பட்டன. சில சமயங்களில் தியானத்திற்கு உதவ, தேநீர் அருந்தும்போது ஊதுபத்திகள் கொளுத்தப்பட்டன.

**தே நீர் கிண்ணங்களை சூடாக வைத்துக்கொள்வது**

தேநீர் அதிக நேரம் சூடாக இருக்க வேண்டும் என்பதற்காக தேநீர் கிண்ணங்கள் வெந்நீரில் கழுவப்பட்டன. நீர்க்குவளைகள் மூலம் கிண்ணங்கள் மீது வெந்நீர் ஊற்றப்படும். அந்த நீர் அசுத்த நீர் ஜாடிகளில் சேகரிக்கப்படும்.